5. அறிவிப்பு.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஓர் அறிவிப்பு இப் பேரவையின் 6-வது விதிக்கிணங்க கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் மூன்றாம் கூட்டத்தொடரில் மாற்றுத் தலைவர் களாக (Panel of Chairman) நான் நியமிக்கின்றேன் :—

1. திரு. வி. எஸ். கோவிந்தராஜன்
2. திரு. பி. மலைச்சாமி.
3. திரு. ந. தருமலிங்கம்.
4. திரு. எஸ். முருகையன்.
5. திரு. வை. சுவாமிநாதன்.
6. திரு. வி. கே. கோதண்டராமன்.

இப்பொழுது திரு. ஆசைத்தம்பி அவர்கள் அவர்களுடைய தீர்மானத்தை மூன்மொழிவார்கள்.

6. ஆளுநரின் பேருரைமீது விவாதம்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : சட்டமன்றத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன் : "ஆளுநர் அவர்களுக்கு கீழ்க்கண்ட நன்றியுரை அளிக்கப்பட வேண்டும் : '10-2-1968-ம் தேதியன்று இரு அவைகளும் சேர்ந்த சட்டமன்றக் கூட்டத்தில் ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு ª தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர் களாவர்'."

திரு. எஸ். முருகையன் : சட்டமன்றத் தலைவரவர்களே, மாண்பு மிகு ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்க திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழி மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்தையொட்டி திருத்தத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் 14-2-1968, 12 மணிவரையில் கொடுக்கலாம்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : சட்டமன்றத் தலைவரவர்களே, மாட்சிமை தங்கிய கவர்னர் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தமைக்காக நான் மிகமிக மகிழ்ச்சியடைகிறேன்.

கவர்னர் அவர்கள் உரையை ஆற்றுகிறபொழுது நம்மையும், நாட்டையும் களிப்புக்கடலிலே ஆழ்த்திய ஒரு சம்பவம் நிகழ்ந்ததை நம்மாலே மறக்க முடியாது. தமிழக சட்டமன்ற

ª 73–83-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

83–97-ம் பக்கங்களில் ஆளுநரின் பேருரையின் தமிழாக்கம் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.